**மேன்முறையீடு 2ம் சுற்று**

**மேன்முறையீட்டினை சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விசேட விடயங்கள்**

1. 2024 ம் ஆண்டிற்குரிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 மாணவர்களை அனுமதிக்கும் போது முதல் சுற்று மற்றும் மேன்முறையீடு 1ம் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாடசாலைக்கு அனுமதித்த பின்னர் மீதியாக உள்ள வெற்றிடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக மேன்முறையீடுகள் கோரப்படுகின்றன. மேன்முறையீட்டுக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் போது மாணவர் பெற்றுள்ள புள்ளிகள் மற்றும் பாடசாலைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளி தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

2. இந்த மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக கொண்டு வந்து சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளோ கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

3. மேன்முறையீடு செய்யும் போது ஆகக் கூடியது 03 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். (தேவைக்கேற்ப 1 அல்லது 2 பாடசாலைகளுக்கு மாத்திரமும் விண்ணப்பிக்க முடியும்). பாடசாலைகளை வழங்கும் போது விண்ணப்பித்துள்ள பாடசாலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகளின் வரிசைப்படி மாணவருக்கு கிடைக்கும் பாடசாலை தீர்மானிக்கப்படும். சமமான வெட்டுப் புள்ளிகளுடன் கூடிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலைகளின் பெயர்களை அகரவரிசைப்படி வரிசைப்படுத்தும் போது, கிடைக்கும் முதலாவது பாடசாலைக்கு தெரிவு செய்யப்படுவர்

4. பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் திகதிக்கு பாடசாலையில் வெற்றிடங்கள் காணப்படும் மாத்திரம், காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பாடசாலைகளுக்கு மாணவர்கள் அனுப்பப்படுவார்கள்.

5. **மேன்முறையீடுகளின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் பணிகள் நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படும் என்பதால் மேன்முறையீடுகளை நிகழ்நிலை மூலமாக மாத்திரம் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.**